மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் எனும் மரபு கவிதைத் தொகுப்பில் காதலின் வெளிப்பாடு

## A View on Loveism in the collection of traditional poems Poonthazhal

காஞ்சனா தேவி/ Kanchana Devi Nantha Kumar[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: Dkanchana392@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் எனும் மரபு கவிதைத் தொகுப்பில் காணப்படும் காதல் குறித்தொரு பார்வையே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்தப் பூந்தழல் எனும் மரபு கவிதைத் தொகுப்பில் காதல் குறித்துச் சுமார் 20 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையிலும் கவிஞர் காதல் தொடர்பான செய்திகளைக் காட்சிப்படுத்திப் படைத்துள்ளார். காதலர்கள் எதிர்நோக்கும் அனைத்தையும் மிகத் தெளிவாகக் கவிதைகளில் இடம்பெறச் செய்துள்ளார். இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்குப் பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பே முதல் நிலைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கவிதைகளில் காதல் தொடர்பான செய்திகளைப் பல இடங்களில் இன்றைய காலத்திற்கேற்ப கவிஞர் தெளிவுபடுத்தியுள்ளார்.
**கருச்சொற்கள்:** பூந்தழல், மரபு கவிதை, காதல், வெளிப்பாடு

**Abstract**

The aim of this study is to find a view of the Tamil influence found in the collection of traditional poetry Poonthazhal. There are about 20 poems on love in this collection of traditional poetry. It is well known that the poet has composed poems to express the feeling of love through this poetry collection. This study has been handled in qualitative approach. For this study, Poonthazhal traditional poetry collection has been used as primary data. In these poems, the loveism are very beautifully and elegantly written by the poet in many places. Through this study, it Is possible to know that the poet has composed poems in many places to convey the feeling of Love.
**Keywords:** Poonthazhal, traditional poem, love, expression

**முன்னுரை**

தமிழ் மொழியின் செழுமையையும் எளிமையையும் தமிழ்க் கவிதை சொல்லும். தமிழ்க் கவிதைகள் இனிமையும் எளிமையும் சிறந்த இலக்கண நடையும் கொண்டவையாகும். ஒரு கவிதை தன்னை வாசிக்கும் வாசகனின் மூலமே முழுமை அடைகிறது. சங்கபாடல்களில் தொடங்கித் திருக்குறள் வரை வளரும் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள்/ மரபு கவிதை நடையிலே அமைந்தவை. இவற்றின் வழி, வாசகன் மனத்தில் இக்கவிதைகளும் கருத்துகளும் ஆழமாகப் பதியும் என்பது குறிப்பிடத்தக்கது. கவிதை எனப்படுவது 'ஒரு சொல்லை நீக்கி வேறொரு சொல்லை இங்கு அமைத்தால் இக்கருத்தும் அமைப்பும் சிறக்காது' என்று கருதுமளவிற்கு இன்றியமையாத சொற்சேர்க்கையைக் கொண்டு திகழ்வது என்பதாகும். பூந்தழல் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பு, கவிஞர் மு. ஆசைத்தம்பி (ஆவலன்) அவர்களால் எழுதப்பட்டதாகும். எட்டுத் தலைப்புகளைக் கொண்டுள்ள இக்கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் மொழி எனும் கருப்பொருளில் எழுதப்பட்ட கவிதைகளில் தமிழ்ப்பற்றுக் குறித்த பதிவுகளை ஆராய்ந்து இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**தனிமை**

இக்கவிதைத் தொகுப்பில் கவிஞர் காதலி இன்றிக் காதலன் படும் வேதனையையும் தனிமையையும் குறித்த செய்திகளைத் தெளிவாகப் பதித்துள்ளார். மனிதரான நமக்குச் சுகத்தையும் துக்கத்தையும் பகிர்ந்து கொள்ள சில உறவுகள் தேவைப்படுகின்றன. ஒருவன் தன் காதலி தன்னுடன் தான் பெற்ற இன்பத்தைக் காதலியோடு பகிர இயலாத தனிமையான நிலையைக் கவிஞர்,

எவ்வாறு நானுரைப்பேன்
யான்பெற்ற இன்பத்தை!
இவ்வேளையில் அவளில்லை
என்னருகில் என்செய்வேன்? (பக்கம்104)

எனவெழுதி தன் உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். உறவுகள் காதலை வெளிப்படுத்தவும் பெறுதலும் மிகவும் முக்கியம். சில சமயங்களில் பிறர் தரும் காதலை நாம் அறிந்தும் அறியாமலும் அலட்சியப்படுத்தி விடுகிறோம். தனிமை, மனித வாழ்க்கையில் சில நேரங்களில் முக்கியம். இருப்பினும், இன்னொருவருடன் நமது வாழ்க்கையைப் பகிரும்பொழுது நமக்கான வாழ்க்கை இன்னும் சிறக்கும் என்பதனை இக்கவிதையின் வழி உணர முடிகிறது.

**ஒருதலைக் காதல்**

ஒருதலை காதல் ஒருவரை வலிக்கும் வேதனைக்கும் ஆளாக்கி விடுகிறது. ஒருதலைக் காதல் எளிது என்று சிலர் கூறுவதுண்டு. ஆனால், எளிமையாகக் கூறிவிடுவதைப் போன்று அன்று. இவ்வொரு தலைக் காதல் என்று,

நாடிநான் தழுவ வந்தால்
நழுவியே ஓடு கின்றாய்!
ஏனடி! நீ இன்னும் என்னை
இன்னலில் வீழ்த்து கின்றாய்!
ஊடல்கொண்(டு) எனது நல்ல
உயிரையேன் வதைக்கின் றாயோ?

கவிஞர் அழகான வரிகள் வழி, செதுக்கியிருக்கிறார். ஒருதலைக் காதலில் பல விதமுண்டு. ஒருவரை நாம் விருப்பம் கொள்ளும் பொழுது எதிர்ப்புறம் நமக்குப் பிரியமான ஒருவர் அவ்விருப்பத்தைக் காட்டாவிடில் நாம் ஆழ்ந்த துன்பத்திற்குள்ளாகிறோம். நாம் தேவைகளை அறிந்து நமக்கு ஏற்ற ஒருவரை முக்கியமாக நாம் கொடுக்கும் காதலைப் பாரபட்சம் பாராமல் மறுபடியும் திருப்பிக் கொடுக்கும் ஒருவரைக் காதல் செய்வது மிகச் சிறப்பு.

**உண்மைக் காதல்**

பொய்யான அன்பும் காதலையும் காட்டி; சுயநலத்திற்கு ஒருவரின் காதலைப் பயன்படுத்திக் கொள்வது மிகவும் சாதாரணச் செயலாகி விட்டது. இவ்வாறு காதலை அசுத்தப்படுத்தும் இடையில் உண்மையான காதலுக்கு ஏங்குபவரின் எண்ணிக்கை எண்ணிலடங்கா. அப்படிப்பட்ட நிலையில் தன் காதல் மெய் என்பதை,

இனிக்கின்ற புத்தமுதே
இவ்வுலகம் பொய்யடி! -அடி
ஏந்திழையே என்காதல்
என்றென்றும் மெய்யடி! (பக்கம் 106)

கவிஞர் கூறியுள்ளார். இக்கவிதையில் காதலன் கோடிக் கணக்கில் வாழும் இப்பூவுலகைத் தன் காதலோடு ஒப்பிட்டுத் தனது காதலே மெய் என்று காதலியிடம் தன் காதலின் ஆழத்தைக் காட்டுகின்றான். நாம் விரும்பும் ஒருவரிடம் நாம் காதலின் உண்மையை உணரவைக்க இவ்வையகமே பொய் என்று கூறுவதில் எவ்வித ஐயமும் இல்லை என்று கவிஞர் இவ்வழி வாசகர்களுக்கு உணர்த்துகிறார்.

**காதலில் ஏமாற்றம்**

ஏமாற்றம் மனிதரின் வாழ்க்கையை தலைகீழாக மாற்றிவிடும். குறிப்பாகக் காதலில் ஏமாற்றம் அடைந்தவரைப் பித்தனாக மாற்றிவிடும் என்பதைப் பல வேளைகளில் நாம் கண்டுள்ளோம்; உணர்ந்துமுள்ளோம். தொடக்கத்தில் பல காதல் கனவுகளில் மிதந்து, தன்னையும் உலகையும் மறந்து காதல் கடலில் மூழ்கிப் பிறகு ஏதோ ஒரு காரணத்திற்காகக் காதலிக்கும் ஒருவரை விட்டுச் செல்வதால் காதலன் அடையும் மன வேதனையைக் கவிஞர் 'ஏன் மறந்தாய்' எனும் கவிதையில் வெளிக்காட்டியுள்ளார்.

பொன்னாசை எல்லாமே
புகழாசை மறந்திருந்தேன்!
உன்னாசை என்னாசை
ஒன்றென்று நினைத்திருந்தேன்!
இன்னோசை குயில்மொழியே
ஏன்என்னை மறந்தாயோ? (பக்கம் 108)

இனி வாழ்க்கையே நாம் காதலிப்பவர்தான் என்று முடிவு செய்து, அவருக்காக எல்லாவற்றையையும் இழந்து கடைசியில் தனிமரமாகச் சில காதலர்கள் ஆகிவிடுகின்றனர். இன்றைய காலக்கட்டத்தில் ஆணோ பெண்ணோ, இருபாலினரும் காதலை இழந்து வாழ்க்கையை இழந்து விடுகிறார்கள். நாம் நமது வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளப் போகும் ஒருவரை நாம் எப்பொழுதும் கைவிடாதிருப்பது பின் வரும் இல்வாழ்க்கைக்கு நன்மை பயக்கும்.

**காதலின் உணர்வு**

காதல் மனத்தில் மகிழ்வூற்றும் உணர்வைத் தரவல்லது. காதலில் ஒருவர் விழும்போது, 'டோபமைன்' (Dopamine) என்ற இரசாயனம் மூலையில் சுரப்பதால் நாம் காதலிக்கும் ஒருவரைப் பற்றியோ நமது காதலைப் பற்றியோ நமக்குச் சரியான தோற்றம் அளிக்கும். (ஜேமி டச்சார்ம், 2014) காதல் உணர்வு தனிமையையும் மன அழுத்தத்தையும் போக்க வல்லது.

பெண்ணே வளர்க்கின்றாய்!
பேதைமை செய்கின்றாய்!
பண்ணால் குரலெடுத்துப்
பைந்தமிழ்ப் பேச்சாலென்
எண்ணச் சிறகுவிரித்(து)
எங்கோ பறக்கவிட்டாய்! (பக்கம் 112)

எனும் கவிதை வரிகளின் வழி கவிஞர் காதலன் கொள்ளும் அழகான உணர்வை விளக்குகிறார். இக்கவிதையில் காதலன் தன் காதலியின் அழகிலும் அவளின் நினைவிலும் பித்துப் பிடித்துக் கிடப்பதை அழகாகக் காண்பித்திருக்கிறார்.

**தமிழ்ப் பெண் மீதான மோகம்**

இக்காலக்கட்டத்தில் சாதி மாறி, மதம் மாறி, கலாச்சாரம் மாறித் திருமணம் செய்வது வழக்கமாகிவிட்டது. இருப்பினும் சிலர் கலாச்சாரம் மாறாமல் தன் மொழி அறிந்த தன் பண்பாடு அறிந்த; பண்பாடு செழித்திருக்கத் தமிழ்ப் பெண்ணையே மணக்க ஆசை கொள்கிறார்கள். மரியாதையிலும் பண்பாட்டிலும் வளமை பெறும் தமிழ்ப்பெண்கள் மூட நம்பிக்கை இன்றி, சுயநலமின்றி, ஒழுக்கம் கெடாமல் இருப்பவர் என்று தமிழ்ப்பெண்களின்

மேல் இருக்கும் மரியாதையையும் காதலையும் இக்கவிதையின் வழி கவிஞர் வாசகர்களுக்குப் புரிய வைத்திருக்கிறார்.

> உரிமை! உரிமை! என்றுசொல்லி
> ஒழுங்கு கெட்டு வாழாமல்
> பரிவும் அன்பும் நற்பண்பும்
> பண்பாட்(டு) அறிவும் பெற்றிலங்கும்
> தமிழச்சி ஒருத்தி (பக்கம் 117)

**நிறைவுரை**

பூந்தழல் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பை ஆராயும்பொழுது, கவிஞர் காதலுக்கு மரியாதை தருபவர் என்றும் தமிழ்ப்பெண்கள் மீது மரியாதை கொண்டவர் என்றும் அறிய முடிகிறது. பிறகு, கவிஞர் காதல் உணர்வோடு அறிவியலையும் கவிதையில் புகட்டியுள்ளார். இறுதியாக, கவிஞர் காதலை இன்றைய வாழ்வோடு மையப்படுத்தி வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையும் இக்கவிதையில் சேர்த்துள்ளார் என்று அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


ஆசைத்தம்பி.மு. (2021). பூந்தழல் கவிதைத் தொகுப்பு. உமா பதிப்பகம், கோலாலம்பூர்

தமிழ் இணையக் கல்விக்கழகம் - Tamil Virtual Academy(2017). https://www.tamilvu.org/ta/courses-degree-p203-p2031-html-p2031111-29836